பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**29 11 2025** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) **Ditwah** புயல், சென்னைக்கு தெற்கே **350** கிலோமீட்டர் தொலைவிலும், காரைக்காலுக்கு தென்கிழக்கே **150** கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

2) புயல் காரணமாக, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

3) **2047**-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைத்துத்தரப்பினரும் பங்களிக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

4) தமிழகத்தில், சம்பா பயிருக்கு காப்பீடு செய்வதற்கு நாளை மறுநாள் வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5) அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள **Ditwah** புயல், கடந்த ஆறு மணி நேரமாக **10** கிலோமீட்டர் வேகத்தில் வட திசையில் நகர்ந்து வருவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது சென்னைக்கு தெற்கே **350** கிலோமீட்டர் தொலைவிலும், காரைக்காலுக்கு தென்கிழக்கே **150** கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இது மேலும் தீவிரமடைந்து, வட தமிழக, புதுச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேச கரையை நோக்கி வடக்கு — வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்றும் வானிலை அறிக்கை கூறுகிறது.

இதனிடையே, இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் திருமதி அமுதா, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்தார்.

***(Voice Byte — அமுதா — 66 Sec. )***

இந்நிலையில், சென்னையில் உள்ள அவசரகால செயல்பாட்டு மையத்தில் மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புயலை எதிர்கொள்வதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனிடையே, நாகை மாவட்டத்தில் Ditwah புயல் காரணமாக பெய்துவரும் தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 40 Sec.)*

மயிலாடுதுறை மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தரங்கம்பாடியில் தேசிய பேரிடர் மீட்புப்படை வீரர்களும், சீர்காழியில் மாநில பேரிடர் மீட்புப்படையினரும் தயார் நிலையில் உள்ளனர்.

தரங்கம்பாடி, பூம்புகார், வானகிரி உள்ளிட்ட 28 கிராமங்களில் உள்ள சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மற்றும் படகுகளும் கரையோரங்களில் பாதுகாப்பாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பூண்டி மற்றும் புழல் நீர் தேக்கங்களில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சிவகுமார் - 37 Sec.)***

<<<<>>>>>

**2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைத்துத்தரப்பினரும் பங்களிக்க வேண்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.**

**உத்தராகண்ட் மாநிலம் Mussoorie-யில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகவியல் கல்விக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இளைஞர்களும் நாட்டின் வளர்ச்சிக்கான பணிகளில் முனைப்புடன் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.**

**பெண்களுக்கான அதிகாரம் உறுதிசெய்யப்பட்டால்தான், நாடு விரைந்து வளர்ச்சிபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.**

**பெண்கள் அதிக அளவில் பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.**

**அவர்களுக்கான வாய்ப்புகள் அதிக அளவில் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.**

நாட்டில் பெரிய மாற்றத்தை கொண்டுவர அரசு ஊழியர்களும், அயராது பாடுபட வேண்டும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>>

தமிழகத்தில், நடப்பாண்டு சம்பா நெற்பயிர் மற்றும் இதர பயிர்களுக்கான காப்பீடு செய்வதற்கான கால அவகாசத்தை நாளை மறுநாள் வரை மத்திய அரசு நீட்டித்து அனுமதி அளித்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்டுள்ள மாநில அரசின் செய்திக்குறிப்பில், தொடர் மழை மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் போன்றவற்றால் பயிர் காப்பீடு செய்ய கால தாமதம் ஆவதாக விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில உரிமை உள்ள அனைத்து விவசாயிகளும் இ-சேவை மையத்தை அணுகி, விவசாயி பதிவை மேற்கொண்டு அடையாள அட்டை பெற்றுக்கொள்ளுமாறும் மாநில வேளாண் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், கடந்த **2024-25**-ஆம் ஆண்டில் நான்கு லட்சம் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் இழப்பீட்டுத்தொகையாக **697** கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>>

தமிழக மாணவர்கள் உலக நாடுகளுடன் போட்டியிடும் அளவிற்கு அறிவியல் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் இன்று நடைபெற்ற அறிவியல் கண்காட்சி நிறைவு விழாவில் பேசிய அமைச்சர், மாநில அளவில் அறிவியல் கண்காட்சி மற்றும் போட்டிகள் நடத்தப்படுவதால், மாணவர்களின் புதுமையான சிந்தனையை ஊக்குவித்து, புதிய படைப்புகளை உருவாக்கி வருவதாகவும் கூறினார்.

கடந்த **2009**-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அறிவியல் கண்காட்சி திட்டத்தின்மூலம், தேசிய அளவிலான மாணவர்களின் கண்டுபிடிப்புகள் கொண்டுவரப்படுவதாக திரு கோ வி செழியன் தெரிவித்தார்.

<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

**திருப்பத்தூர் மாவட்டம் அங்கநாதவலசை பகுதியில், 33 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டடப்பட்ட சமுதாய நலக்கூடத்தை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று திறந்துவைத்தார்.**

-------------------

**நாமக்கல் மாவட்டம் ஊனந்தாங்கள் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில், பழங்குடியின விவசாயிகளுக்கான வாழையில் நார் மற்றும் மதிப்புக்கூட்டல் திட்டத்தினை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தொடங்கிவைத்தார்.**

----------------

**மதுரை தெப்பக்குளம் தனியார் கல்லூரியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டுப் படிவங்கள் பதிவேற்றம் செய்யப்படுவதை மாவட்ட ஆட்சியர் திரு பிரவீன்குமார் இன்று ஆய்வு செய்தார்.**

----------------

**தென்காசி மாவட்டத்தில் கடும் பனிப்பொழிவால் வரத்து குறைவு காரணமாக பூக்களின் விலை உயர்ந்துள்ளது.**

<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.**

**மலேசியாவில் இன்று நடைபெற்ற கனடாவுக்கு எதிரான ஆட்டத்தில், 14-3 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றிபெற்றது.**

**இதன்மூலம், இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.**

**--------------------**

**போபாலில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Nitin Kumar Sinha, Dig vijay Pratap Singh ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.**

**<<<<END>>>>>**